1.

கன்னபுரம் பெரிய சாமிக்கவுண்டர். வீராத்தாளைப் பற்றி சொன்ன வரலாறு.

முன்காலத்தில் கணவாள குலக்கவுண்டர் ஒருவருக்கு, இரண்டு மனைவிகள் இருந்தார்கள். சிலநாட்களில் அந்தக் கவுண்டர் இறந்துவிட்டார். அக்காலம் இந்நாட்டை முஸ்லீம் ஆண்டு வந்தார்கள். அப்போது புருஷன் இறந்துவிட்டால், பெண்கள் உடன் கட்டை ஏறுவது வழக்கம். அதற்கு நாட்டு அரசாங்கத்திடன் அனுமதி பெற வேண்டும்.

இப்படியாக மேற் சொன்ன கணவாள குலக் கவுண்டர் மனைவி அதாவது மூத்த மனைவி உடன்கட்டை ஏறுவதற்கு இளையதாரத்தின் மக்களை நோக்கி "அப்பா! நான் உடன் கட்டை ஏற வேண்டும். வாருங்கள் காங்கயம் சென்று ராஜாவிடம் ஆர்டர் வாங்கி வருவோம்" என்றாளாம். அதற்கு இளைய தாரத்தின் மக்கள் சொன்னது-

"நாங்கள் வரமாண்டோம்! நீபோய் என்னமோ செய்து கொள்" என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு அப்பெண் கோபமடைந்து இளைய காரத்தின் மக்களை நோக்கி "உங்கள் குடும்பம் எப்போதும் விருத்தியடையாது என்று சொல்லிவிட்டு, உடனே காங்கயம் சென்று ராஜாவிடம் அனுமதி பெற்று வந்து தீக்குழியில் இறங்கிவிட்டாளாம்.

உடன் கட்டை ஏறிய வீராத்தா என்ற பெண் தெய்வமாகி ஓலப்பாளையத்தில் கோவில் கட்டி அப்பெண்ணின் வம்சாவளிகள் இன்றும் வருஷா வருஷம் ஆடி மாதம் வீராத்தாளுக்கு பொங்கல் வைத்து பூஜித்து வருகிறார்கள்.

இளையகாரத்தின் வம்சத்தினர் இத் தெய்வத்தை கும்பிடுவதில்லை.

24, 6, 66
ராமியாத்தாள் கன்னபுரம்.

இளைய காரத்தின் வம்சத்தில், தேவாத்தாள் என்ற பெண் கிணற்றில் விழுந்து -

இறந்து விட்டதாகவும், அதை
தெய்வமாக வைத்து கொண்டாடி வந்தார்
களாம். தேவாத்தாள் என்ற தெய்வம்
கன்னபுரத்திற்கு தெற்கு ஆத்திக் காடு
என்ற தோட்டத்தில் வேலா மரத்தின்
அடியில் உள்ளது. அது இப்போது
நீர் குறைந்திருப்பதாக சொல்கிறார்கள்.